OS: 509/2018

Date: 25.08.2025

பெயர் : மணி

பிரதிவாதி தரப்பு சாட்சி 1.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி எனது மகன் என்றால் ஆமாம். 7ம் பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் இல்லை. நான் என்ன படித்து, என்ன தொழில்செய்கிறேன் என்றால் பி.யு.சி வரை படித்துவிட்டு எலக்ட்ரிக்கல் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு மேட்டூர் சார்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் போது நானும்,இதர பிரதிவாதிகள் அனைவரும் ஒரே வழக்கறிஞர் மூலம் தான் ஆஜர் ஆனோம் என்றால் ஆமாம்.

2. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரைக்கான தகவல்களை நானும், எனது மகனும் தான் எங்களது வழக்கறிஞருக்கு சொன்னோம் என்றால் ஆமாம். அந்த விவரங்களை மற்ற பிரதிவாதிகளும் ஒப்புக்கொண்டார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கின் பிராதில் சொல்லியுள்ள விவரங்கள் தெரியும் என்றால் தெரியும். இந்த வழக்கை அருள்மிகு ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோவில் தர்மகர்த்தாக்கல் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் தர்மகர்த்தா ஒருவர் தான் மற்றவர்கள் உறுப்பினர்கள் தான்.

3. வழக்கு சொத்திற்கு வடக்கு புறம் எனக்கு பாத்தியப்பட்ட தார்சு கட்டிடம் இருக்கிறது என்றால் ஆமாம். அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருக்கிறேன் என்றால் ஆமாம். எனது நிலத்தின் சர்வே எண். 81/1M2 ஆமாம். எனது இரண்டு கடைக்கும் இடையே பேரூராட்சிக்கு சம்பந்தப்பட்ட ஒரு கிணறு இருக்கிறது. எனது நிலத்தின் விஸ்தீரணம் 1.00 ஏர்ஸ் என்றால் ஆமாம். வழக்கு சம்பந்தமாக 7 பிரதிவாதிகளும் சேர்ந்து ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.252/2007 என்ற வழக்கை அருள்மிகு ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில் தர்மகர்த்தாக்கல் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் இல்லை. கோயில் காரர்கள்தான் எங்கள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். நாங்கள் எந்த வழக்கும் போடவில்லை.

4. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், நாங்கள் தான் கோவில் மீது வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல. நான் செய்த வழக்கில் வழக்கு சொத்து சாலை என்று விளம்புகை செய்ய சொல்லி பரிகாரம் கேட்டிருக்கிறோம் என்றால் நான் வழக்கு போட்டது போல நினைவில்லை. பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையை வாதிகள் ஆக்கரமிக்க வந்ததால் நாங்கள் அதனை தடுத்தோம். எனது முதல் விசாரணையில் இந்த வழக்கு சொத்து 30 வருடங்களுக்கு மேலாக சாலையாக பயன்பாட்டில் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லியிருக்கும் நிலையில் அதனை நிரூபிக்க ஆவணம் ஏதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். மருத்துவர் சந்திரசேகன் வாங்கிய கிரைய பத்திரத்தில் யுனியன் கக்கூஸ் சந்து என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறது.

5. சொக்குபந்தியில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். நான் ஓமலூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.252/2007 என்ற வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும், அந்த வழக்கில் ஓமலூர் Selection grade panchyet Officer அவர்களை ஒரு தரப்பினராக சேர்த்திருக்கிறேன் என்றாலும், இந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் நான் நினைவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 6ம் பிரதிவாதி பஞ்சாயத் போர்ட் வழக்கு சொத்தை ரோடு என்று அறிவித்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் எனக்கு வழக்கு போட்டதே நினைவில்லை. ரோடு என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் அந்த வழக்கிலோ, இந்த வழக்கிலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவா சொத்து பொதுமக்கள் பயன்படுத்தும் பொது பாதை என்றும் ஓமலூர் தேர்வு நிலை பேரூராட்சியால் நாளது வரை பராமரிக்கபட்டுவருவதாக சொல்லியிருக்கும் நிலையில் இதனை நிரூபிக்க ஆவணம் எதுவும் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் ஆவணம் இல்லை. ஆனால் பேரூராட்சியின் தூய்மை பணியாளர்கள் தான் இன்று வரை அதனை தூய்மை செய்கிறார்கள்.

7. பேரூராட்சியில் குப்பை எங்கெல்லாம் இருக்கிறதோ அதனை அள்ளி செல்வது அவர்களுடைய பணி என்றால் ஆமாம். தெருக்களை சுத்தம் செய்வதும் அவர்கள்

பணிதான். தாவா வழக்குசொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும் அவர்கள் எந்த உரிமையும் கோரமுடியாது என்றும் நான் சொல்லியுள்ள நிலையில் எந்த அடிப்படையில் அவ்வாறு சொல்கிறேன் என்றால் பொதுமக்கள் 40, 50 வருடங்களாக அதனை பயன்படுத்தி வருவதால் நான் சொல்கிறேன்.

8. வா.சா.ஆ.1 ஆவணம் வழக்கு சொத்தின் சர்வே எண் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்று 1937ம் வருடத்திய Re-settlement registerல் குறிப்பிடப்பட்டுள்ளதை குறித்து தெரிந்து கொண்டேனாஎன்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1984ம் வருட யு.டி.ஆர் அ பதிவேட்டிலும், வழக்கு சொத்தை கோவில் பெயரில் பட்டா வழங்கிய நிலையில் அந்த பட்டாவை வா.சா.ஆ.2ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

9. வழக்கு சொத்துகோவிலுக்கு பாத்தியப்பட்டதல்ல ரோடு என்று காட்ட எனக்கு கிரையம் கொடுத்த எனது கிரையதாரர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனக்கு சொத்தை விற்பனை செய்தவர்கள் வெளியூர் சென்றுவிட்டார்கள். நான் என் பெயரில் வழக்கு சொத்திற்கு வடபுறம் உள்ள சொத்தை கிரையம் பெற்ற பின்னர் வழக்கு சொத்து வாதி கோயிலுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், பொது ரோடு என்றும் அறிவிக்கக்கோரி வருவாய் துறையினரிடமோ, தேர்வுநிலை பேரூராட்சியிடமோ மனு கொடுத்தேனா என்றால் இல்லை.

<u>வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.